சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

மனு எண். எம்.சி.ஓ.பி.20 /2018

PW - 2

2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 31ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திருமதி.பி.மோகனவள்ளி, பி.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | ரவீந்தரன் |
| க.பெ. (அ) த.பெ. | கிருஷ்ணன் |
| வயது | 57 |
| முகவரி | பொள்ளாச்சி |

**முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது பொள்ளாச்சி ஊரக மாநில வரி அலுவலராக பணியாற்றி வருகிறேன். என்னுடைய பணியாளர் அடையாள அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு நகல் **மசாஆ 18** ஆக குறியீடு செய்யப்பட்டது. எனக்கு சாட்சியம் அளிக்க கொடுக்கப்பட்ட அனுமதிக்கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது **மசாஆ 19** ஆக குறியீடு செய்யப்பட்டது. விபத்தில் இறந்துபோன நாகேந்திரகுமாருக்கு படுக்கை மற்றும் தலையணை தயாரிப்பதற்காக எங்களால் உரிமம் வழங்கப்பட்டது. உரிமம் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது **மசாஆ 20** ஆக குறியீடு செய்யப்பட்டது. நாகேந்திரகுமார் ஜி.எஸ்.டி. செலுத்தி வந்தார், அந்த எண். 33ACNPL3743Q1ZI ஆகும். உரிமம்

25.10.2010 முதல் 01.10.2017 ம் தேதி வரை நடப்பில் இருந்தது. எங்களுக்கு செலுத்த வேண்டிய வரியை அவர் முறையாக செலுத்தி வந்தார்.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நாகேந்திரகுமாருக்கு கொடுக்கப்பட்ட உரிமத்தை இரத்து செய்யுமாறு எங்களுக்கு விண்ணப்பம் எதுவும் வரவில்லை, ஆனால் 01.10.2017 ம் தேதி வரி செலுத்தாததால் உரிமம் இரத்து செய்யப்பட்டுள்ளது. வரி செலுத்தாத காரணத்தினால் 2017 ம் வருடமே வழங்கப்பட்ட உரிமம் இரத்து செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னிட்டு நிலுவை வரியை செலுத்தி 20.11.2017 ம் தேதி கணக்கு முடிக்கப்பட்டுள்ளது. ஜூலை மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை வரி செலுத்தாமல் பாக்கி இருந்தது. அதன் அடிப்படையில்தான் நாங்கள் உரிமத்தை இரத்து செய்தோம் என்றால் சரிதான். அவர் இறந்து போனதால் உரிமம் இரத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். உரிமம் வழங்கிய காலத்தில் இருந்து தொழில் நடைபெற்றதா? என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தொழில் செய்து வந்தார்.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி